# 22

## ஹலால் – ஹராம் பேணுவோம்

‘‘மனிதர்களே! பூமியில் உள்ளவற்றில் (உண்பதற்கு) அனுமதிக்கப்பட்டவற்றையே உண்ணுங்கள். ஷைத்தானின் அடிச்சுவடுகளைப் பின்பற்ற வேண்டாம்’’ (அல்குர்ஆன் 2:168).

‘‘நிச்சயமாக ஹலால் தெளிவானது, ஹராமும் தெளிவானது. இவ்விரண்டுக்கும் இடையில் சந்தேகமான சில விடயங்கள் இருக்கின்றன. அவற்றை அதிகமான மனிதர்கள் அறியமாட்டார்கள். எவர் அச்சந்தேகமான விடயங்களைத் தவிர்ந்து கொள்கின்றாரோ, அவர் தனது மார்க்கத்தையும், தனது மானத்தையும், தனது பொருளாதாரத்தையும் (தீயவற்றிலிருந்து) பாதுகாத்துக் கொண்டார். எவர் சந்தேகமான விடயங்களில் ஈடுபடுகிறாரோ அவர் ஹராமான விடயங்களில் விழுந்து விட்டார். இடையன் பாதுகாப்பான வேலியருகில் (ஆட்டை) மேய்ப்பது போல, அது (பாதுகாப்பான வேலிக்குள் இருக்கும் பயிரையும்) மேய்ந்து கொள்ள முயற்சிக்கும். அறிந்துகொள்ளுங்கள்! ஒவ்வொரு அரசனுக்கும் பாதுகாப்பு அரண்கள் உள்ளன. (அவ்வாறே) அறிந்துகொள்ளுங்கள்! அல்லாஹ்வின் பாதுகாப்பு அரண், அவன் தடுத்தவைகளாகும்’’ (புஹாரி, முஸ்லிம்).

இவை ஹலால் - ஹராம் பேணப்படுவதன் அவசியத்தை வலியுறுத்துகின்றன. இஸ்லாத்தில் அனுமதிக்கப்பட்ட விடயங்கள் ‘ஹலால்’ என்றும், தடுக்கப்பட்டவை ‘ஹராம்’ என்றும் குறிப்பிடப்படுகின்றன. மனித வாழ்வின் இலட்சியம் அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தைப் பெறுவதாகும். அல்லாஹ்வின் திருப்தியை நாடும் ஒருவன் தனது நாளாந்த வாழ்க்கையில் ஹலால், ஹராம் பேணி நடப்பது இன்றியமையாததாகும்.

ஹலால் - ஹராம் எனும்போது உணவை மட்டும் கருத்திற் கொள்வது தவறானதாகும். உணவு, உடை, பழக்கவழக்கம், பண்பாடு, விளையாட்டு போன்ற வாழ்வின் சகல அம்சங்களிலும் ஹலால், ஹராம் இருப்பது கவனத்திற் கொள்ளத்தக்கதாகும். உதாரணமாக இறந்த மிருகமொன்றின் மாமிசத்தை உண்ணல், வட்டியுடன் சம்பந்தப்படுதல், திருடுதல், இலஞ்சம் வாங்குதல், ஆண்கள் பெண்களாகவும், பெண்கள் ஆண்களாகவும் வேடம் பூணுதல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

அல்லாஹ்விடத்தில் பிரார்த்தனை செய்வது வணக்கமாகக் கருதப்படுகின்றது. இப்பிரார்த்தனை அல்லாஹ்விடத்தில் அங்கீகாரம் பெறுவதற்கு, பிரார்த்திப்பவனின் உணவு, உடை முதலான அனைத்தும் ஹலாலானதாக அமைய வேண்டியது கட்டாயமானதாகும். இதனைப் பின்வரும் நபிமொழி உறுதிப்படுத்துகின்றது.

நபி முஹம்மத் ﷺ கூறியதாக அபூஹுரைரா (ரழி) அறிவிக்கிறார்கள் ''அல்லாஹ் தூயவன், அவன் தூய்மையானவற்றை மட்டுமே ஏற்றுக் கொள்கிறான்''

நீண்ட தூரம் பயணம் செய்த ஒருவரைப் பற்றிச் சொன்னார்கள். தலைவிரி கோலமாக, தூசு படிந்தவராக தனது கரங்களை வானத்தை நோக்கி உயர்த்தி யா ரப்பு! (இறைவனே) யா ரப்பு! எனக் கதறுகின்றார். ஆனால், அவர் உண்பவை ஹராமானவை. அவர் உடுப்பவை ஹராமானவை. அவரோ ஹராமானவற்றால் போசிக்கப்பட்டவராக உள்ளார். இந்த நிலையில், அவர் எவ்வாறு அல்லாஹ்விடமிருந்து பதிலை எதிர்பார்க்க முடியும் (முஸ்லிம்).

## பொருளீட்டல்



மனிதன் பணத்தின் பின்னால் ஓய்வு, ஒழிச்சலின்றி ஓடிக்கொண்டே இருக்கின்றான். ஹலால் - ஹராம் பேணலைத் தள்ளிவைத்துள்ளான். எப்படியும் பணம் தேடலாம், எப்படியும் வாழலாம் என்றொரு மனப்பாங்கு ஏற்பட்டுள்ளது. இதனையும் நபியவர்கள் எச்சரித்தே உள்ளார்கள். ''மனிதர்களிடையே ஒரு காலம் வரும். பணத்தை ஹலாலான வழியில் பெற்றேனா, ஹராமான வழியில் பெற்றேனா என்பதை மனிதன் பொருட்படுத்தமாட்டான்'' (புஹாரி).

இந்த நபிமொழி இன்றைய மனிதனின் நிலையைச் சித்தரிப்பதாக உள்ளது. சில ரூபாய்களுக்காக எதனையும் செய்யும் நிலைக்கு மனிதன் நிலை குலைந்து போயுள்ளான். ஏமாற்றும், மோசடியும் மலிந்துள்ளன. பொய் மிகச் சாதாரண செயலாக மாறியுள்ளது. வாய்மை, நேர்மை, இறையச்சம் மறைந்து போயுள்ளன.

இந்நிலையில் அல்லாஹ் விரும்பிய வழிமுறையில் ஹலால், ஹராம் பேணி வாழ்வை அமைத்துக் கொள்வதன் மூலமே இம்மை, மறுமை வெற்றியைத் தமதாக்கிக் கொள்ளலாம்.

## செலவு செய்தல்

பொருளீட்டல் தொழிற்பாடுகள் அல்லாஹ்வுக்கு விருப்பமான வழிமுறைகளில் அமைய வேண்டியது எவ்வளவு அவசியமோ அவ்வாறே செலவீடும் அல்லாஹ் அனுமதித்த வழிகளில் அமைவது அவசியமாகும்.

இஸ்லாத்தின் பார்வையில் சகல செல்வங்களும் அல்லாஹ்வுக்குரியன. அவை மனிதர்களுக்கு அமானிதமாகவே வழங்கப்பட்டுள்ளன. இதுபற்றி ஒவ்வொரு மனிதனும் மறுமைநாளில் விசாரணைக்குட்படுத்தப்படுவான் என்பது முஸ்லிம்களது நம்பிக்கையாகும். இதனை ''பணத்தை எவ்வாறு பெற்றுக் கொண்டாய்? எவ்வழியில் செலவு செய்தாய்?

என்று கேட்கப்படும் வரை மறுமைநாளில் மனிதனின் கால்கள் நகர்த்தப்படமாட்டாது'' என்ற நபிமொழி உறுதி செய்கிறது.

### செலவிடுதலின்போது கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய முக்கிய விடயங்கள்

- அல்லாஹ்வின் திருப்தியை நாடி செலவு செய்தல்.
- நல்ல நிய்யத்துடன் (எண்ணத்துடன்) செலவு செய்தல்.
- வருமானத்துக்கு ஏற்ப செலவை அமைத்துக் கொள்தல்.
- செலவழித்தலில் நடுநிலை பேணுதல்.
- பிறருக்குக் கொடுக்கும்போது சிறந்த பொருட்களைக் கொடுத்தல்.
- சிக்கனத்தைப் பேணி, கஞ்சத்தனத்தைத் தவிர்த்துக் கொள்ளல்.

### அனுமதிக்கப்பட்ட செலவினங்கள் சில

- மார்க்கக் கடமைகளை நிறைவேற்றுவதற்காகச் செலவிடுதல். உதாரணம்: ஸகாத், ஸதகா, ஹஜ், உழ்ஹிய்யா...
- குடும்ப நலன், தாபரிப்புப் பணிகளில் செலவிடுதல்
- இரத்த உறவு, அயலார் தேவைகளுக்காகச் செலவிடுதல்
- பொதுப் பணிகள், சமூக நலன் போன்ற விவகாரங்களுக்காகச் செலவிடுதல்
- அனாதைகள் இயலாதோருக்காகச் செலவிடுதல்
- இஸ்லாத்தின் நலன்களுக்காகச் செலவிடுதல்
- விருந்தினரை உபசரிப்பதற்காகச் செலவிடுதல்.

### செலவிடுதலின்போது தவிர்க்கப்பட வேண்டியவை

- வீண்விரயம்

  ''உண்ணுங்கள் பருகுங்கள் வீண்விரயம் செய்ய வேண்டாம். நிச்சயமாக அவன் வீண்விரயம் செய்பவர்களை நேசிப்பதில்லை'' (07:31).
- ஹராமான தொழில் முயற்சிகளில் முதலீடு செய்தல்
- மக்கள் நலனுக்குப் பாதிப்பேற்படுத்தும் விடயங்களுக்கு உதவுதல்
- போட்டி போட்டுக் கொண்டு அடுத்தவனை மிகைக்க வேண்டுமென்ற நோக்கில் செயற்படுதல்
- முகஸ்துதிக்காகச் செலவு செய்தல்

- குற்றங்களை மறைக்கவும் குற்றவாளிகளைத் தண்டனைகளிலிருந்து காப்பாற்றவும் செலவிடுதல்
- வீண் விளையாட்டுக்களுக்கு (சூது, பந்தயம்...) செலவிடுதல்
- கேளிக்கைகள், ஆடம்பரங்களுக்காகச் செலவிடுதல்

### செலவிடுதலின் மூலம் கிடைக்கப் பெறும் பயன்கள் சில:

- அல்லாஹ்வின் அன்பையும் நற்கூலியையும் பெறல்
- அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவதாக அமைதல்
- அல்லாஹ்வின் மீதான நம்பிக்கை அதிகரித்தல்
- குடும்ப, சமூக உறவு பலமடைதல்
- சமூகத்தில் பரஸ்பர ஒத்துழைப்பு ஐக்கியம் விருத்தியடைதல்
- கஞ்சத்தனத்திலிருந்து உள்ளத்தைத் தூய்மைப்படுத்தல்
- மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்கு உதவுதல்
- நலிவுற்றவர்களுக்கு உதவுவதன் மூலம் அவர்களுடனான பிணைப்பு வலுவடைதல்.

### எங்களது வாழ்க்கைக்கு...

ஹலாலான வழியில் பொருளீட்டுவோம்!
அல்லாஹ் அனுமதித்த வழியில் செலவு செய்வோம்!
ஏழை எளியோரின் துயர் துடைத்து அல்லாஹ்வின் அருளுக்கு உட்படுவோம்!

**செயற்பாடு:**

1. இன்று சமூகத்தில் காணப்படும் அனுமதிக்கபடாத பொருளீட்டல் முறைகளைப் பட்டியல் படுத்துக.
2. உணவு, உடை, பழக்க வழக்கங்கள், விளையாட்டுக்கள் என்பவற்றில் ஹலால்-ஹராம் பேணல் இஸ்லாமிய அடிப்படையில் மிக முக்கியமானதாகும். அந்த வகையில் பின்வருவனவற்றிற்கு மும்மூன்று உதாரணங்களை எழுதுக.
   i) ஹராமான உணவு வகைகள்
   ii) ஹராமான் உடைகள்
   iii) ஹராமான பழக்க வழக்கங்கள்
   iv) ஹராமான விளையாட்டுக்கள்